தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**6 வயதுப்பிரிவு**
(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## தமிழீழம் எங்கள் தாயகம்

நாங்கள் ஈழத்தமிழர்கள். எங்களுடைய தாயகம் தமிழீழம். எங்களுடைய தாய்மொழி தமிழ்மொழி. வடக்கே யாழ்ப்பாணமும் வன்னிப் பெருநிலமும், கிழக்கே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையும் மேற்கே புத்தள மாவட்டக் கரையோரமும் அடங்கிய நிலப்பகுதி தமிழீழம் ஆகும்.

இயற்கை வளங்களும், அழகும், பண்பாட்டுச் சிறப்பும் மிக்கது எங்கள் தாயகம். அது கல்வியைக் கண்ணெனப் போற்றும் பண்பாளர்கள் வாழ்கின்ற பெருமை மிக்க நாடு.

எங்கள் தாயகத்தின் மீது நாங்கள் பேரன்பு கொண்டுள்ளோம். பெற்ற தாய்க்கு இணையாக அதனைப் போற்றுகின்றோம். எல்லாளன், பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்ற மன்னர்கள் எமது தாயகத்தைக் காத்து நின்றார்கள்.

பறிக்கப்பட்ட தாயகத்தின் மீதான எமது ஆட்சி உரிமையை மீட்பதற்குத் தலைவர் மாமாவின் வழிகாட்டலில் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்றோம். எம் விடுதலைக்கான போரிலே பல்லாயிரம் மாவீரர்கள் தங்கள் உயிரை ஈகம் செய்துள்ளார்கள்.

இவர்கள் அனைவரையும் ஒருபோதும் நாம் மறந்துவிடமாட்டோம். “தமிழீழம் எங்கள் தாயகம்” என்று உரக்கச் சொல்கின்றோம். எங்கள் தாயகத்தை மீட்டு, எமது ஆட்சியை நிலைநாட்டுவோம்.

நன்றி,

வணக்கம்.